## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, கார்த்திகை 18, திருவள்ளுவர் ஆண்டு–2045

## 2014 டிசம்பர் 4, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
*யாஉள முன்நிற் பவை."*

*இயற்கையான அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும் ஒருசேரப் பெற்றவர்களுக்கு, தீர்த்து வைக்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் என்று எதுவும் இல்லை. எத்தகைய சூழ்ச்சிகளானாலும், அவர்கள் வெற்றி காண்பார்கள்.*

### 1. இரங்கற்குறிப்புகள்

#### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்கள் 18-8-2014 அன்றும், திரு. பெ. கந்தசாமி அவர்கள் 5-9-2014 அன்றும், திரு. நா. மகாலிங்கம் அவர்கள் 2-10-2014 அன்றும், திரு. எஸ்.எஸ். இராஜேந்திரன் அவர்கள் 23-10-2014 அன்றும், திரு. மு. ரங்கநாதன் அவர்கள் 10-11-2014 அன்றும் மற்றும் திரு. ஏ.அ. சுப்பராஜா அவர்கள் 2-12-2014 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. எஸ். பாலசுப்பிரமணியன் அவர்கள் 1985 முதல் 1988 வரையில், அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.*

திரு. பெ. கந்தசாமி அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் இரண்டு முறை பொங்கலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. நா. மகாலிங்கம் அவர்கள் 1952 முதல் 1957 வரையிலும், 1957 முதல் 1962 வரையிலும் மற்றும் 1962 முதல் 1967 வரையிலும் மூன்று முறை பொள்ளாச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ்.எஸ். இராஜேந்திரன் அவர்கள் 1962 முதல் 1967 வரையில் தேனி தொகுதியிலிருந்தும் மற்றும் 1980 முதல் 1984 வரையில் ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1970 முதல் 1976 வரையில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. மு. ரங்கநாதன் அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1998 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை குன்னூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. ஏ.அ. சுப்பராஜா அவர்கள் 1967 முதல் 1971 வரையில் இராஜபாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*